# கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தி அரங்கம்

## *மட்டக்களப்பு மாவட்ட கூட்ட அறிக்கை*

இடம் : மாநாட்டு மண்டபம், மட்டக்களப்பு மாநகர சபை

திகதி : 30.07.2013

வருகை தந்தோர் : பின்னிணைக்கப்பட்டுள்ளது

### 1. வரவேற்புரையும் அறிமுகமும்

மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கூட்டத்தின் தொடக்க நிகழ்வாக வரவேற்புரை நிகழ்த்திய பிரதம செயலாளர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த கௌரவ முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை வரவேற்றதுடன் மாகாண அபிவிருத்தி அரங்கம் அதன் மாவட்ட கூட்டங்களினது தேவை மற்றும் அதன் நோக்கங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

இத்தகைய மாவட்ட மட்ட கூட்டங்களின் மூலம் அபிவிருத்தி திட்டமிடல் நடைமுறையில் கௌரவ முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் போன்ற சமூக பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பங்கு கொள்வதினால் இவர்களிடையே தேவைகளினடிப்படையில் இணைந்து சேவையாற்றுகின்ற சிநேக பூர்வமான உறவு மலர்வதுடன் அதனூடாக மக்களுக்கு சிறந்த பெறுபேறுகளைத் தரும் பயன்மிக்க திட்டங்களை தயாரித்து அமுலாக்கவும் அவற்றினை கண்காணித்து மதிப்பீடுகளை செய்யவும் நடைமுறை பிரச்சினைகளை விவாதித்து தீர்வு காணவும் முடியும் என்றும் குறிப்பிட்டார்.

### 2. கௌரவ முதலமைச்சரின் சிறப்புரை

மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் மாவட்ட கூட்டங்களை நடாத்துவதில் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த கௌரவ முதலமைச்சர் அவர்கள், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி எடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைகளை தவிர்த்து நிறைவான இலக்குகளை அடையமுடியுமென தனது சிறப்புரையில் குறிப்பிட்டார். 30 வருடங்களாக பின்தங்கியிருந்த மட்டக்களப்பு மாவட்டம் தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் மாவட்டமாக மாறி வருகிறது என்றும் அபிவிருத்திக்கேற்ப பொறிமுறைகளை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கென பல்வேறு நிதி மூலங்களிலிருந்தும் 2013ம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைக்கு கிடைக்கவிருக்கும் 7,000 மில்லியன் ரூபாவில் ஏறத்தாழ 2,230 மில்லியன் ரூபா மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கென குறிப்பாக கல்வி, சுகாதாரம், வீதி, நீர்ப்பாசனம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் உள்ளூராட்சி சேவைகள் போன்ற துறைகளில் செலவு செய்யப்படவுள்ளது. இவற்றில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, JICA மற்றும் UNICEF போன்றவற்றின் நிதியுதவியுடன் அமுலாக்கப்படும் விசேட செயற்திட்டங்கள் சிறந்த பங்களிப்பை கொண்டிருக்கின்றன. இந்நடவடிக்கைகளில் மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அவற்றின் மாவட்ட அலுவலகங்கள் தெளிவான இலக்குடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி வருவதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த கௌரவ முதலமைச்சர் விமர்சனங்கள், கலந்துரையாடல்கள் மூலம் காலதாமதங்களை தவிர்த்து ஏனைய மாகாணங்களுக்கு சளைக்காத வகையில் எமது மாகாணத்தையும் முன்னேற்றி கிழக்கு மாகாணத்தினை ஓர் வளம் கொழிக்கும் மாகாணமாக மாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### 3. கிழக்கு மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்

அபிவிருத்தி அரங்கின் கலந்துரையாடல்களிற்கு வசதியளிக்கும் நோக்கில் தேசிய அபிவிருத்தி கொள்கையுடன் இணைந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் பிரத்தியேக தேவைகளையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் தொடர்பான குறுகிய விளக்கப்பட உரை ஒன்றினை திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் நிகழ்த்தினார்.

அவர் தனது விளக்கவுரையின்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற வருடாந்த அமுலாக்கல் திட்டங்கள் யாவும் ஏற்கனவே சீரானமுறையில் தயாரிக்கப்பட்ட கிழக்கு மாகாண நிறுவன பெறுபேற்று உருவகமைப்பினை (*Agency Result Framework*) அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுவதாகவும் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் இயலுமானவரையில் மாவட்டங்களுக்கிடையில்

உரிய அளவில் பங்கீடு செய்யப்படுவதுடன் மாவட்டங்களினுள்ளே இனரீதியிலான பகிர்வுகளும் பேணப்படுவதாக குறிப்பிட்டார்.

அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளையும் உள்வாங்கி நடாத்தப்படும் மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் மாவட்ட கூட்டங்களின் ஏற்பாடுகளை வரவேற்று பாராட்டிய மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் மற்றும் ஏறாவூர் நகரசபை தவிசாளரும் இச்செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கான ஆதரவுகளை தருவோம் எனவும் குறிப்பிட்டனர்.

**4. அபிவிருத்தி துறைகள் ரீதியான கலந்துரையாடல்**

துறைசார் கலந்துரையாடல்களிற்காக அபிவிருத்தி துறைகள் மாகாண அமைச்சுகள் வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஒவ்வொரு தலைப்பிலான கலந்துரையாடலின் ஆரம்பத்திலும் குறிப்பிட்ட மாகாண அமைச்சு செயலாளர்களினால் பிரதான அபிவிருத்திக் கூறுகள், நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால அபிவிருத்தி விடயங்கள் முதலீடுகளின் சாராம்சம் தொடர்பாக விளக்கப்படவுரையை மேற்கொண்டு கலந்துரையாடலுக்கு வசதியளித்தனர்.

இதனை தொடர்ந்து ஒவ்வொரு அபிவிருத்தித்தலைப்புகளிலான கலந்துரையாடல்களின் போது அரங்கில் பங்குபற்றியவர்களினால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

- மாகாண நிதி மற்றும் விசேட திட்டங்களின் உதவியுடன் அமைக்கப்படுகின்ற பெரும்பாலான வீதிகள் குறுகிய காலத்தினுள்ளே பழுதாகி உடைந்து விடுகின்றன என்றும் தரமுயர்த்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக வீதிகள் தெரிவு செய்யப்படும் போது சிறந்த செயன்முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள் அதில் பிரதேச சபைகளின் அபிப்பிராயம் பெற்றுக்கொள்ளப்படலாம் எனவும் கேட்டுக்கொண்டனர்.
- நடைபாதை வியாபாரம் மற்றும் நிரந்தர கடைத்தொகுதி என்பவற்றிடையே போட்டியும் முரண்பாடுகளும் இடம்பெறுவதை சுட்டிக்காட்டிய மாகாணசபை உறுப்பினர்கள் நடைபாதை வியாபாரிகளை கட்டுப்படுத்தும் பலமான உபவிதிகள் உள்ளூராட்சி சபைகளிடம் இல்லாமையே முக்கிய காரணமெனவும் அதனால் பொருத்தமான உப விதிகளை இயற்றி அவற்றினை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதன் மூலம் உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.
- “தயட்ட கிருள”, “புறநெகும” போன்ற விசேட திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டு இவ்வாறான திட்டங்களுக்குரிய மிகவும் பொருத்தமான தமிழ் பெயர்களையும் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதுடன் அவ்வாறானதொரு நிலையியே தமிழ் மக்களும் அவற்றினுடைய நிறைவான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
- வாவிகள் அலங்கரிப்பு போன்ற சுற்றுலா துறை தொடர்பான திட்டங்களை செயற்படுத்துகையில் இயற்கை தன்மை பேணப்படல் வேண்டும் என்றும் சுற்றுச்சூழல் தொடர்பான சாத்தியவள ஆய்வு உரிய முறையில் செய்யப்பட்டு இவ்வாறான திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களை தவிர்க்கலாம் எனவும் மேலும் இவ்வாறான அபிவிருத்திச்செயற்பாடுகளின் போது கலாசார சீரழிவு ஏற்படாவாறு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
- கிராம அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளிற்கென கிராமங்கள் தெரிவுசெய்யப்படும் போது பக்கச் சார்பாக காணப்படுவதாகத் தெரிவித்து அவ்வாறான கிராமத் தெரிவுகளின் போது பொருத்தமான தெரிவுப் பிரமாணங்கள் வரையறுக்கப்பட்டு இயலுமான வரையில் ஏனைய சமூகப் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசித்து கிராமங்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.
- இதற்கு பதிலளித்த கௌரவ முதலமைச்சர் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் திட்டமிட்ட அபிவிருத்திகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் எதிர்வரும் காலங்களில் மேலும் பல கிராமங்கள் பல்வேறு திட்டங்களின் ஊடாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்ட ஆலோசனைகள் உள்வாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
- உலக வங்கியின் உதவியுடன் அமுல்படுத்தப்படும் புறநெகும (நெல்சிப் NELSIP) திட்டத்தில் முடிவுறாமல் இருக்கும் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் இதற்கு வேண்டிய மேலதிக நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைளை மேற்கொண்டு இத்திட்டம் தொடரப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
- கல்குடா, புனானை பகுதிகளில் மீள்குடியேறியவர்களுக்கு புனர்வாழ்வு புனர் நிர்மாணத் தேவைகள் அதிகமாகவிருப்பதால் மேலதிக நிதி ஒதுக்கீடு செய்து அவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது.

- பட்டிருப்பு மகிழமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் 07 வகுப்புகள் தற்காலிக கொட்டகைகளில் நடைபெறுகிறது என்றும் 04 வகுப்புகள் மாத்திரம் நிரந்தர கட்டடத்தில் நடைபெறுகிறது என்றும் தளபாடங்கள் பெருமளவில் தேவைப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஓரளவு தளபாடங்கள் சிவசக்தி வித்தியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் UNICEF மூலமும் 2 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதிலளித்தார். வலயக் கல்விப் பணிப்பாளரை குறிப்பிட்ட பாடசாலைக்கு நேரில் சென்று தற்போதைய நிலைமையைப் பரிசீலனை செய்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.
- வெபர் விளையாட்டு மைதானத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சு பொறுப்பேற்று அபிவிருத்தி செய்து வருவதால் தற்போது ஏறத்தாழ 6000 மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகளை தொடர்வதற்கு மைதானம் இல்லாமல் போய்விட்டது என்றும், உடனடியாக மாநகர சபைக்கு அண்மையிலுள்ள தரைப்பகுதியை சீர்ப்படுத்தி அதனை தற்காலிக மைதானமாக மாற்றி மாணவர்களுக்கு உதவுமாறு கோரப்பட்டது. அத்துடன் வெபர் மைதான அபிவிருத்தி வேலைகள் முடிவடைந்ததும் அதனை மீண்டும் மாநகர சபை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறப்பட்டது. குறிப்பிட்ட நிலப்பகுதியை உடனடியாக மாணவர்களுக்கு தற்காலிக மைதானமாக மாற்றிக் கொடுக்கும்படி மாநகர சபை மேயருக்கு பணிப்புரை வழங்கிய கௌரவ முதலமைச்சர், அபிவிருத்தி வேலைகள் முடிவடைந்ததும் வெபர் மைதானத்தை மீண்டும் மாநகர சபை பொறுப்பேற்க வேண்டியதன் அவசியத்தை கௌரவ ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு ஆளுநரின் செயலாளரிடம் கேட்டுக்கொண்டார்.
- புனரமைப்பு செய்வதற்கு வீதிகளை தெரிவு செய்யும் போது மாகாண சபை உறுப்பினர்களுடன் கலந்து பேசி அவற்றினை தெரிவு செய்யும்படி கோரப்பட்டது.
- முள்ளிவெட்டுவான் ஆறு புனரமைப்பு தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டமை குறிப்பிடப்பட்டது அப்போது இத்திட்டமானது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் வருவதாகவும் அவர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படலாம் எனவும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இத்தகைய சிறு குளங்கள் மாகாண நீர்ப்பாசனத்திணைக்களத்துடன் இணைந்து எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது பற்றி கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்ப்பாசன பணிப்பாளரை கௌரவ வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் கேட்டுக் கொண்டார்.
- வீதிகள் புனரமைக்கப்படும்போது, உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான வீதிகளில் உள்ள மின் கம்பங்களை இலங்கை மின்சார சபை அவற்றை அகற்றி பொருத்தமான இடங்களுக்கு மாற்ற வேண்டும் எனக் கோரப்பட்டது. இவ்வாறான வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஆரம்பக்கட்டத்திலேயே சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களுடனும் கலந்தாலோசிக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டது.
- நன்னீர் மீன் வளர்ப்பு திட்டங்களை அமுல்படுத்தும் போது சில உள்ளூர் மீன் இனங்கள் அழிக்கப்படுகின்றன என்றும் இவற்றினை தவிர்த்து மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.
- மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளேயே தரமான விதை நெல்லை உற்பத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவ்வாறான விதை நெல்லின் பாவனையை கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.
- காலநிலைக்கு ஒவ்வாத பசு மாடுகளை வேறு இடங்களில் இருந்து கொண்டுவருவதிலும் பார்க்க சிறந்த இன காளை மாடுகளை வெளி இடங்களில் இருந்து பெற்று சிறந்த விருத்தியினை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அத்துடன் கால்நடைகளுக்கான காப்புறுதியினை குறைந்த கட்டணங்களில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.
- சித்தாண்டியில் அமைந்துள்ள கோழித்தீன் உற்பத்தி செய்யும் ஆலையையும் அங்குள்ள அரிசி ஆலையையும் புனரமைப்பு செய்து தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டபோது கோழித்தீன் உற்பத்தி ஆலையின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்று விவசாய அமைச்சுச் செயலாளர் பதிலளித்தார்.
- கரடியனாறு விவசாயப் பண்ணையில் பயிற்சி நிலையம் மட்டுமே கிழக்கு மாகாண சபையின் பொறுப்பிலுள்ளது என்று தெரிவித்து அதன் ஏனைய பிரிவுகளையும் கிழக்கு மாகாண சபையின் கீழ் கொண்டு வருவதற்கு ஆவன செய்யும்படி கோரப்பட்டது.
- சமூகசேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள கூடுதலான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டும் குறைவான எண்ணிக்கையானோர்க்கு மட்டும் இக்கொடுப்பனவு

வழங்கப்படுகின்றது என்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த உதவிகள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த கௌரவ சுகாதார அமைச்சர், சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் விசேட நியதிச்சட்டம் உருவாக்கப்பட இருப்பதாகவும், அது உருவாக்கப்பட்டதன் பின்பு கொடுப்பனவிலுள்ள குறைபாடுகள் தீர்க்கப்படும் என தெரிவித்தார்.

- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் விதவைகள் தொடர்பான பிரச்சினைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக தெரிவித்த மாகாணசபை உறுப்பினர்கள் இது ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுப்பதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவும் விதவைகள் தொடர்பான திட்ட நடவடிக்கைகளிலும் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும் எனக்கோரப்பட்டது.

- கூட்டுறவுச் சங்கங்கள் சுய வருமானம் பெற முடியாமல் நலிவடைந்து கொண்டு இருக்கின்றன என்றும் இவற்றை சீர்படுத்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

- முன்பள்ளி ஆசிரியர்களது சம்பள கொடுப்பனவு தொடர்பில், ஏறத்தாழ 642 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்றும் ஏனையவர்களிற்கு வேறு சில நிறுவனங்களின் ஊடாக வழங்கப்படுகின்றது என்றும் இவர்களிற்கான கொடுப்பனவுக்கென நிதி ஒதுக்கீடுகள் இல்லை என்றும் இவர்களுக்கு சிறு கொடுப்பனவானது வழங்க வழி செய்ய வேண்டும் என கோரப்பட்டதுடன் முன்பள்ளித்துறையை அபிவிருத்தி செய்ய சிந்தனைகள் புதியவையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பிரச்சினை தொடர்பாக கௌரவ முதலமைச்சருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பதிலளித்த முன்பள்ளி கல்விப் பணியகத் தலைவர் பாலர் பாடவிதானங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு கற்பித்தல் நடவடிக்கைகள் புதியமுறையின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

- பாடசாலை நிகழ்வுகளிற்கு சமூகப்பிரதிநிதிகளை அழைப்பது தொடர்பான சுற்றுநிருபத்தின் தெளிவின்மையை சீர் செய்யுமாறு கல்விச்செயலாளருக்கு கௌரவ கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

5. அபிவிருத்தி அரங்கத்தின் கூட்ட நிறைவின் போது பிரதம செயலாளர் அவர்கள் மாகாண அபிவிருத்தி பொறிமுறை மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவது தொடர்பில் பின்வரும் விடயங்களைத் தெரிவித்தார்.

- மாகாண அமைச்சுக்கள் திணைக்கள உயர் அதிகாரிகளினது பங்குபற்றுதலுடன் துறைசார் கூட்டங்களை மாகாண மட்டத்தில் ஒரு சீரான இடைவெளியில் நடாத்துவதுடன் அக்கூட்டங்கள் மாவட்ட மட்டத்திற்கும் உரிய பங்குபற்றுதல்களுடன் விரிவாக்கப்பட வேண்டும்.

- அபிவிருத்திக்கான நிதிப்பகிர்வின்போது துறைகளுக்கிடையே கணிசமான அளவிற்கு சமத்தன்மை பேணப்படும்

- மத்திய மற்றும் மாகாண நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஒருங்கிணைப்புத் தன்மையைப் பேணவும் தேவையான தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தவும் கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், பிரதம செயலாளர், மாகாண செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் என்பவர்களது பங்குபற்றுதலுடன் ஒரு ஒருங்கிணைப்பு கூட்டம் விரைவில் நடாத்தப்படும்.

- பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினை வலுவூட்டி மாகாண சபை உறுப்பினர்கள், பொருத்தமான மாகாண சபை நிறுவன உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலுடன் பிரதேச மட்டத்தில் அமுலாக்கப்படும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- தற்போதுள்ள பொறிமுறைகள் மற்றும் படிமுறைகளை மேலும் முன்னேற்றகரமாக்குவதற்கு புத்தாக்க யோசனைகளை உள்வாங்குதல்.

இக் கூட்டத்திற்கு வருகை தந்து ஆர்வத்துடன் பங்குபற்றிய சகல மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்து பிரதம செயலாளர் நிகழ்வினை நிறைவு செய்தார்.

டி. எம். எஸ். அபயகுணவர்த்தன
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாண சபை